**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.103/12**
**வழக்கு சாட்சி – அ.சா.11**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜ்குமார் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 06.04.23

**( 2 , 3 எதிரிகள் இறந்துவிட்டனர். 4, 7, 10, 11ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 4, 7, 10, 11ம் எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1, 5, 6, 8, 9 எதிரிகள் ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகள் எதிரான குற்றங்கள் தொடர்பான புலனாய்வு பிரிவில் துணை கண்காணிப்பாளராக ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2010ம் வருடம் தேனி மாவட்டம் மாவட்ட குற்றப்பிரிவில் ஆய்வாளராக பணியில் இருந்த போது எனக்கு முன்பாக ஆய்வாளராக இருந்த இளஞ்செழியன் என்பவர் புலனாய்வு செய்த வழக்கு டிசிபி குற்ற எண். 58/10 இதசபிரிவு 468, 471, 419, 420 மற்றும் 120(பி) வழக்கினை அவர் பணிமாறுதலில் சென்றதால் தொடர் புலன்விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன். அவர் ஏற்கனவே விசாரித்த சாட்சிடிகள் கோதையம்மாள், மற்றும் ராஜாராம் ஆகியோர்களை விசாரணை செய்ய அவர்கள் முன்பு கொடுத்திருந்த வாக்குமுலப்படியே என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை பின்பு சாட்சிகள் வாசுகி ராஜகோபால், பிரபாகரன், காளிராஜ், உதயசூரியன், கணேஷ்பாபு, மாரியம்மாள், மகாதேவி மற்றும் அத்தாட்சி சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வழக்கில் புகார்தாரரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களை பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அவை முறையே மாதாரி என்பவர் சுப்பையன் ஆசாரிக்கு எழுதிக்கொடுத்த ஒத்தி பத்திரம் ஆவணஎண்.1695/1925 அசாஆ.8. திம்மன்மாதாரி மகன் காமாட்சி மாதாரி , மாரியம்மாள் சேர்ந்து சின்னசீனிசெட்டியாருக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் ஆவணஎண்.112/1953 அசாஆ.9. சின்னசீனிசெட்டியாரிடமிருந்து எதிரி தனக்கு சொந்தமாக சொல்லப்படும் சுப்பையகுடும்பன் கிரயம் பெற்ற பத்திரம் ஆவணஎண்.294/1955 அசாஆ.10. சுப்பையாகுடும்பன் கிரயம் பெற்ற சொத்தை அவரது வாரிசுகள் சேர்ந்து லட்சுமணன் என்பவருக்கு பவர் கொடுத்த ஆவணம் சான்றிட்ட நகல் ஆவணஎண்.167/1994 அசாஆ.11. லட்சுமணன் என்பவர் தீரன்மாதாரிக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரம் சான்றிட்ட நகல் ஆவணஎண். 32/1997 அசாஆ.12. வெள்ளிமலையம்மாள் என்பவருக்கு சர்வேஎண்.186 அழகிரிமாதாரி என்பவரின் வாரிசுகள் கிரயம் கொடுத்தது சான்றிட்ட நகல் ஆவணஎண்.2910/1980 அசாஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வெள்ளிமலையம்மாள் தனது பெண் மக்களுக்கு 76 செண்ட் நிலம் தானம் எழுதிக்கொடுத்த சான்றிட்ட நகல் ஆவணஎண்.3094/1999 அசாஆ.13.

வெள்ளிமலையம்மாள் தனது மகன் காளிராஜ் என்பவருக்கு 76 செண்ட் எழுதிக்கொடுத்த தானபத்திரம் சான்றிட்ட நகல் ஆவணஎண்.3095 அசாஆ.14. வெள்ளிமலையம்மாள் பெண்கள் மக்கள் தானம் பெற்ற சொத்தை கண்ணன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரம் சான்றிட்ட நகல் ஆவணஎண்.70/2005 அசாஆ.15. கண்ணன் என்பவரிடமிருந்து காளிராஜ் என்பவர் கிரயம் பெற்ற பத்திரம் சான்றிட்ட நகல் ஆவணஎண்.6511/2005 அசாஆ.16. காளிராஜிடமிருந்து 1 1/2 ஏக்கர் நிலத்தை செல்லையா என்பவருக்கு கிரயம் கொடுத்த பத்திரம் சான்றிட்ட நகல் ஆவணஎண்.7964/2005 அசாஆ.17. செல்லையா என்பவர் பிரபாகரனுக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரம் சான்றிட்ட நகல் ஆவணஎண்.104/07 அசாஆ.18. கோபால் என்பவரிடமிருந்து வாசுகி என்பவர கிரயம் பெற்ற பத்திரம் சான்றிட்ட நகல் ஆவணஎண்.1452/07 அசாஆ.19. வாசுகி என்பவரிடமிருந்து வழக்கின் வாதி பவர் பெற்ற பத்திரம் சான்றிட்ட நகல் ஆவணஎண்.1022/09 அசாஆ.20. வழக்கின் 7 முதல் 10 வரையுள்ள எதிரிகள் 13ம் எதிரிக்கு எழுதிக்கொடுத்த கிரய அக்ரிமெண்ட் சான்றிட்ட நகல் ஆவணஎண். 4702/09 அசாஆ. 21. 1ம் எதிரி மற்றும் அவருடன் சேர்ந்து பூமிநாதன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரம் சான்றிட்ட நகல் ஆவணஎண்.2945/09 அசாஆ.22. ஊஞ்சாம்பட்டி கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சர்வேஎண்.186 க்கு பட்டா வழங்கிய விபரம் குறித்த அறிக்கை அசாஆ. 23. சர்வேஎண்.186 க்குரிய புலவரைபடம் அசாஆ.24. தொந்திமகன் சுப்பையா குடும்பனுக்கு 1 முதல் 6 எதிரிகள் வாரிசு என்று வழங்கிய வாரிசு சான்று த.ப.எண்.D.Dis 7183/10/A2 அசாஆ.5 ஆக ஏற்கனவே குறியிடு செய்யப்பட்டுள்ளது. தொந்திமகன் சுப்பையா குடும்பனுக்கு 7ம் எதிரி வாரிசு என்று வழங்கிய வாரிசு சான்று த.ப.எண்.1735/09 அசாஆ.25. தொந்தி என்பவருக்கு சுப்பையா என்ற பெயரில் இரண்டு மகன்கள் என்பதற்காக தேனி வட்டாட்சியர் வழங்கிய கடிதம் அசாஆ 4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு எனது புலன் விசாரணையை முடித்து 14.2.11ம் தேதி 1 முதல் 11 வரையுள்ள எதிரிகள் மீது பிரிவுகள் 468, 471, 420 மற்றும் 120பி) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கையினை சமர்ப்பித்தேன்.

**1, 4, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு உரிமையியல் பிரச்சனைக்களுக்கும் ஆவண மோசடி பற்றிய பிரச்சனைக்களுக்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் சின்னசீனிசெட்டியார் கிரயம் பெற்ற கிரய ஆவண எண்.112/1953 ஆவணத்தின் சொத்து விபரம் என்ன என்றால் சர்வேஎண்.186 ஏக்கர் 3ல் தென்பாதி என காட்டப்பட்டுள்ளது. அதன் அளவு என்ன என்றால் 1 ஏக்கர் 50 செண்ட் ஆகும். அதன்படி மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கரில் தென்பகுதியை மேற்படி ஆவணம் மூலம் கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சின்னசீனிசெட்டியாரிடமிருந்து சுப்பையகுடும்பன் கிரயம் பெற்ற பத்திரம் ஆவணஎண்.294/1955 மூலம் ஏற்கனவே சின்னசீனிசெட்டியார் கிரயம் பெற்ற அதே நிலத்தை தான் சுப்பையாகுடும்பன் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு சுப்பையாகுடும்பன் பெயரில் எந்த ஆண்டு பட்டா ஏற்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. வெள்ளிமலையம்மாள் கிரயம் பெற்ற 1980ம் வருட கிரய ஆவணம் அசாஆ.3 ன் படி எந்த சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சர்வேஎண்.186ல் ஏக்கர் 3ல் தென்பக்கம் 1 ஏக்கர் 50 செண்ட் என காட்டப்பட்டுள்ளது. அதன்படி சின்னசீனிசெட்டியார் கிரயம் பெற்ற அதே நிலத்தை தான் சுப்பையாகுடும்பன் கிரயம் பெற்றுள்ளார் என்றாலும், அதே நிலத்தை தான் வெள்ளிமலையம்மாள் கிரயம் பெற்றுள்ளார் என்றால் ஆவணங்களில் கண்டுள்ள விபரங்களின் படி அப்படி தான் பொருள் வருகிறது. வெள்ளிமலையம்மாள் சுப்பையன்குடும்பன் கிரயம் பெற்ற அதே நிலத்தை கிரயம் பெற்றிருந்தால் அது சரியா தவறா என்றால் அதே நிலத்தை கிரயம் பெற்றிருந்தால்

தவறு. தவறான ஆவணங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அசாஆ 3 மற்றும் அசாஆ.8 லிருந்து அசாஆ.18 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் தவறானவை என்றால் சரிதான். 1 முதல் 6 எதிரிகள் பெயரில் வாரிசு சான்று கொடுத்த வட்டாட்சியரை நான் விசாரித்தேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 7 முதல் 10 வரையிலான எதிரகள் பெயரில் கொடுக்கப்பட்ட வாரிசு சான்று பின்னிட்டு இரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ 21 ஆவணஎண். 4702/09 ஆவணத்தில் 1 முதல் 6 எதிரிகள் தரப்பினர்கள் கிடையாது என்றால் சரிதான். பொதுவாக ஒருநிலம் தனக்கு பாத்தியப்பட்டது என்ற தன்னுடைய அனுபவத்தில் உள்ள அத்துமீறி நிலத்திற்குள் நுழைந்ததாக கூறுவது அனைத்தும் உரிமையியல் சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் என்றால் முழுவதுமாக அவ்வாறு கூற இயலாது. இந்த வழக்கில் புகார்தாரருக்கு எதிராக 1 முதல் 6 எதிரிகளால் மோசடியாக ஆவணங்கள் ஏதேனும் உற்பத்தி செய்யப்படடுள்ளதா என்றால் இல்லை. 1 முதல் 6 எதிரிகளை தவறுதலாக வழக்கில் சேர்த்து 2010 முதல் கடந்த 13 ஆண்டுகளாக நீதிமனறத்திற்கு அழைய வைத்துக்கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. தவறு செய்யாத 1 முதல் 6 எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைபட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**7 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சுப்பையன்குடும்பன் 1953 ல் கிரயம் பெற்று வேறு நபர்களுக்கு விற்றுவிட்டார்கள் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சுப்பையகுடும்பன் வாரிசுகள் லட்சுமணன் என்பவருக்கு பவர் கொடுத்து விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். சுப்பையகுடும்பன் கிரயம் பெற்ற சொத்து சர்வேஎண்.186 ல் தென்பகுதி 1 ஏக்கர் 50 செண்ட் என்றால் சரிதான். சுப்பையகுடும்பனின் வாரிசுகள் லட்சுமணன் என்பவருக்க பவர் கொடுத்து அவர் கிரயம் செய்த சொத்தின் விபரம் என்ன என்றால் சர்வேஎண்.186 ல் வடபக்கம் 1 ஏக்கர் 50 செண்ட் ஆகும். ஆவணங்களின் படி சுப்பையகுடும்பன் மொத்த விஸ்திரணத்தில் 1 1/2 ஏக்கரை கிரயம் பெற்றுள்ளார் என்றாலும் ஆனால் அவரின் வாரிசுகள் வடபகுதியியல் 1 1/2 ஏக்கரை கிரயம் செய்து கொடுத்தது தவறு என்றால் சரிதான். வழக்கின் படி சுப்பையகுடும்பன் கிரயம் பெற்ற தென்பகுதி சொத்தை கிரயம் கொடுத்துவிட்டு மறுபடியும் 7 முதல் 10 எதிரிகள் 11ம் எதிரிக்கு கிரய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்பது தான் புகார் என்றால் சரிதான். 7 முதல் 10 எதிரிகளால் அக்ரிமெண்ட் மூலம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது தென்பகுதி 1 1/2 ஏக்கர் சம்மந்தப்பட்டது என்றால் தென்பகுதி 1 ஏக்கர் நிலம் என சொத்துவிபரம் காட்டப்பட்டுள்ளது. 7 முதல் 10 எதிரிகள் அவரது அப்பா சுப்பையகுடும்பன் கிரயம் பெற்ற சொத்தில் 1 ஏக்கர் நிலத்த தான் 11ம் எதிரிக்கு கிரயஅக்ரிமெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆவணங்களின் படி சுப்பையகுடும்பன் கிரயம் பெற்ற தென்பகுதி 1 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை தான் வெள்ளிமலையம்மாள் அசாஆ 3 ன்படி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வெள்ளிமலையம்மாள் வழிமுறையில் தான் புகார்தாரர் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். புகார் மற்றும் முதல் தகவல்அறிக்கையில் சர்வேஎண்.186 ல் மொத்த விஸ்தீரனத்தில் எந்த பகுதியில் மோசடி நடைப்பெற்றது என்று குறிப்பிட்டு காட்டபடவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் தான் வெள்ளிமலையம்மாளிடமிருந்துகிரயம் பெற்றுள்ளதாகவும், சுப்பையகுடும்பன் கிரயம் பெற்ற சொத்து வேறு என்று புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் ஆவணங்களை சரிவர படித்து பார்த்திருந்தால் சுப்பையகுடும்பன் வகையறா மொத்த விஸ்தீரணத்தில் எந்த பகுதியை கிரயம் வாங்கினார்கள் எந்த பகுதியில் பிரச்சனை என்பது குறித்துஆராய்ந்து பாத்திருந்தால் வழக்கே ஏற்பட வாயப்பு இல்லை என்றால் சரியல்ல. 7 முதல் 10 எதிரிகளை தவறுதலாக வழக்கில் சேர்த்து 2010 முதல் கடந்த 13 ஆண்டுகளாக நீதிமனறத்திற்கு

அழைய வைத்துக்கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. தவறு செய்யாத 7 முதல் 10 எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைபட்டுள்ளோம் என்றால் சரியல்ல.